**<u>சார்பு நீதிமன்றம், தேன்கனிக்கோட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம்.</u>**

முன்னிலை: திரு.எஸ். விஜய் அழகிரி, பி.காம்., பி.எல்.,
சார்பு நீதிபதி, தேன்கனிக்கோட்டை
2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07 ம் நாள் செவ்வாய்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2057, விசுவாவசு வருடம் பங்குனி மாதம் 24–ம் நாள்

**<u>அசல் வழக்கு எண். 411/2021</u>**
**<u>CNR. No. TNKI60040152021</u>**

1. வெங்கடாசலபதி
2. சுப்ரமணி
3. நாகராஜ்
4. ராமமூர்த்தி
5. மஞ்சுளா
6. சூரியா ... வாதிகள்

/எதிர்/

1. கிருஷ்ணம்மா
2. வெங்கடாசலபதி
3. வரலெட்சுமி
4. ராமமூர்த்தி

...பிரதிவாதிகள்

இவ்வழக்கு முதன்முதலில் ஓசூர் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 48/2021 என 11.02.2021 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு, அதன்பிறகு கிருஷ்ணகிரி முதன்மை மாவட்ட நீதிமன்ற ROC. No.1992/2021 தேதி 28.04.2021 ன்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 411/2021 என 29.06.2021 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு, இதுவரை நிலுவையில் இருந்து என் முன்பாக 16.03.2026–ம் தேதி இறுதியாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் J. சுதாரெட்டி , B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. K. சதிஷ்குமார், B.A ., LLB., அவர்கள் ஆஜராகியும். இரு தரப்பு வாதுரைகளை கேட்டும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து,

இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:

**தீர்ப்புரை**

தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்ற விளம்புகை பரிகாரத்திற்காகவும், 08.02.2008 மற்றும் 25.11.2008 ஆகிய தேதியிட்ட தான செட்டில்மெண்ட் பத்திரங்களை ரத்து செய்ய வேண்டும் என்ற விளம்புகை பரிகாரத்திற்காகவும், 2 முதல் 4 பிரதிவாதிகள் அசல் வழக்கு முடியும் வரை தாவா சொத்துக்களை பாராதீனம் செய்யக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரத்திற்காகவும் மற்றும் வழக்கு செலவுத்தொகைக்காகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு.

**2. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்.**

தாவா சொத்து தேன்கனிக்கோட்டை தாலுகா நாகமங்கலம் கிராமத்தில் அமைந்துள்ளது என்றும், தாவா சொத்து ஆரம்பத்தில் முனிசாமப்பா மகன் முத்துராயசாமி என்பவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றும், முத்துராய சாமியின் உரிமை மூலம் மற்றும் சுவாதினத்தின் அடிப்படையில் 16.07.1974ல் அவருக்கு பட்டா பாஸ் புத்தகம் வழங்கப்பட்டுள்ளது என்றும், அதன் பட்டா எண் 758 என்றும், முத்துராய சாமி மற்றும் அவருடைய மனைவி சுசீலம்மா ஆகியோர் கூட்டாக தாவா சொத்தினை (வாதிகளின் தகப்பனார்) என்பவருக்கு 23.06.1977 ம் தேதியில் ஆவண எண் 834 / 1997 ன் படி ரூ. 5,100/- கிரயத்தொகைக்கு விற்பனை செய்திருக்கிறார்கள் என்றும், கிரயம் வாங்கிய தேதியிலிருந்து வெங்கட்ராமைய்யா (எ) பெத்த வெங்கட்ராமய்யா அவருடைய அனுபவத்தில் தாவா சொத்து இருந்து வந்தது என்றும், UDR திட்டம் 1983-1986ன் படி வெங்கட்ராமைய்யா (எ) பெத்த வெங்கட்ராமய்யாவுக்கு பட்டா எண் 758 வழங்கப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்திற்கு வெங்கட்ராமைய்யா (எ) பெத்த வெங்கட்ராமய்யா வரி செலுத்தி அனுபவித்து வந்துள்ளார் என்றும், வெங்கட்ராமைய்யா (எ) பெத்த வெங்கட்ராமய்யா 05.06.1999 ம் தேதியில் அவருடைய வாரிசுகளான வெங்கடாஜலபதி (1வது வாதி), சுப்பிரமணி (2வது வாதி), நாகராஜ் (3வது வாதி), ராமமூர்த்தி (4வது வாதி), கிருஷ்ணமூர்த்தி, லக்ஷ்மம்மா மற்றும் சரஸ்வதி ஆகியோர்களை வாரிசாக விட்டுவிட்டு இறந்து விட்டார்

என்றும், வெங்கட்ராமைய்யா (எ) பெத்த வெங்கட்ராமய்யாவின் மகனான கிருஷ்ணமூர்த்தி அவருடைய மனைவியான மஞ்சுளா (5ம் வாதி) அவருடைய ஒரே மகனான சூர்யா (6ம் வாதி) ஆகியோர்களை விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்றும் வெங்கட்ராமய்யா (எ) பெத்த வெங்கட்ராமையாவின் மகளான சரஸ்வதி அவருடைய மகன்கள் ஆன லோகேஷ் சீனிவாஷ் மற்றும் ரவி ஆகியோர்களை வாரிசாக விட்டுவிட்டு இறந்து விட்டார் என்றும், வெங்கட்ராமய்யா (எ) பெத்த வெங்கட்ராமைய்யா இறந்த பிறகு வாதிகள் தாவா சொத்தின் அனுபவத்திலும் சுவாதினத்திலும் இருந்து வருவதாகவும், வாதிகளின் தாத்தாவான ராமையாவிற்கு 2 மகன்கள் 1. வெங்கட்ராமைய்யா (எ) பெத்த வெங்கட்ராமய்யா (வாதிகளின் தகப்பனார்) மற்றும் சின்ன வெங்கட்ராமய்யா ஆகிய இருவரும் வாரிசுகள் என்றும், ராமையாவின் மூத்த மகனை வெக்கட்ராமைய்யா (எ) பெத்த வெங்கட்ராமையா என்றும், ராமைய்யாவின் இளைய மகனை சின்ன வெங்கட்ராமைய்யா என்று அழைப்பார்கள் என்றும், புதிய நத்தம் சர்வே எண் 1338 / 10 பழைய நத்தம் சர்வே எண் 163/3A1A1B ஆகியவை ஆரம்பத்தில் ராமையாவிற்கு பாத்தியப்பட்டு, ராமையா இறந்த பிறகு நத்தம் பட்டா அவருடைய 2 மகன்கள் ஆன வெங்கட்ராமைய்யா (எ) பெத்த வெங்கட்ராமய்யா மற்றும் சின்ன வெங்கட்ராமையா ஆகியோருக்கு நத்தம் பட்டா எண் 2908 வழங்கப்பட்டு அந்த சொத்தில் வெங்கட்ராமைய்யா (எ) பெத்த வெங்கட்ராமய்யா மற்றும் சின்ன வெங்கட்ராமய்யா வீடுகள் கட்டி தனித்தனியாக வசித்து வந்ததாகவும் அந்த நத்தம் பட்டா 30.04.1993 ம் தேதியில் வழங்கப்பட்டுள்ளது என்றும், ராமைய்யாவின் 2 மகன்கள் ஆன வெங்கட்ராமையா என்கின்ற பெத்த வெங்கட்ராமைய்யா மற்றும் சின்ன வெங்கட்ராமைய்யா இருவரும் தனித்தனியாக வீடுகள் கட்டி தனியாக வசித்து தனியாக வரி செலுத்தி தனித்தனியாக அனுபவித்து வந்ததாககவும் வெங்கட்ராமைய்யா (எ) பெத்த வெங்கட்ராமய்யா 1999 ஆம் ஆண்டில் இறந்து விட்டார் என்றும், அவர் இறந்த பிறகு வாதிகள் தாவா சொத்தின் அனுபவத்திலும் சுவாதினதிலும் இருந்து வந்ததாகவும், வாதிகள் அவர்களுடைய குடும்ப சொத்துக்களை 2019ம் ஆண்டில் பிரித்துக் கொள்வதற்கு வில்லங்க சான்றிதழ் எடுத்து பார்த்த பொழுது தான் தாவா சொத்தினை பொறுத்து சின்ன

வெங்கட்ராமைய்யா இறந்த பிறகு அவருடைய மனைவியான 1வது பிரதிவாதி கிருஷ்ணம்மா அவரது வாரிசுகளான 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு 08.02.2008 ம் தேதியில் சர்வே எண் 893/2 பி—ல் 1 ஏக்கரை தான பத்திரம் எழுதி கொடுத்திருப்பதாகவும், மீண்டும் 25.11.2008 ம் தேதியில் 1வது பிரதிவாதி சர்வே எண் 893/2 பி ல் மீதி உள்ள விஸ்தீரனத்தை பொறுத்து 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு 25.11.2008 தேதியில் தானம் செய்திருப்பதாகவும் 08.02.2008 மற்றும் 25.11.2008 ஆகிய ஆவணங்கள் செல்லாதது மற்றும் இல்லா நிலையது என்றும், 2 முதல் 4 பிரதிவாதிகள் சட்டத்திற்கு புறம்பாக சர்வே எண் 893 / 2 பி—ல் 1 ஏக்கருக்கு பட்டா மாற்றி இருப்பதாகவும், சர்வே எண் 893/2 பி ஆனது சர்வே எண் 893 / 2 பி1 மற்றும் 893/2 பி 2 என உட்பிரிவு செய்யப்பட்டிருக்கிறது என்றும், வாதிகள் பிரதிவாதிகளை அணுகி அந்த ஆவணங்களை ரத்து செய்ய கேட்டதாகவும், மேலும் பலமுறை பஞ்சாயத்து வைத்தும் மோசடியான தான பத்திரங்களை ரத்து செய்ய கேட்டு பிரதிவாதிகள் முன்வராததால் வாதிகள் இந்த வழக்கினை தாக்கல் செய்திருப்பதாக கூறப்பட்டிருக்கிறது.

<u>3. 2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை மற்ற பிரதிவாதிகள் ஏற்றுக்கொண்டுள்ளனர் அதன் சுருக்கம்.</u>

வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், இந்த எதிர்வழக்குரையில் இந்த பிரதிவாதிகள் குறிப்பாக ஒத்துக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகள் அனைத்தும் வாதிகளே நிருபிக்க கடமைப்பட்டவர்கள் என்றும், தாவா சொத்து வாதிகளுக்கு உரிமை மூலம் உள்ளது என்று நிரூபிக்க எந்த விதமான ஆவணங்களும் வாதிகள் பெயரில் இல்லை என்றும், அவ்வாறான ஆவணங்கள் எதையும் வாதிகள் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றும், தாவா சொத்துக்கள் ஆனது வாதியின் தந்தையும் பிரதிவாதிகளின் தந்தையும் சேர்ந்து கிரயத்திற்கு வாங்கிய சொத்துக்கள் என்றும், அவர்கள் கிரயம் பெறும் போது குடும்பத்தின் மூத்தவர் என்ற முறையில் வாதிகளின் தந்தையான பெத்த வெங்கட்ராமைய்யா என்பவர் பெயரில் கிரய பத்திரம் பதிவு செய்யப்பட்டது என்றும், வாதிகளின் தந்தை மற்றும் அவருடைய

சகோதரரான பிரதிவாதிகளின் தந்தை சிக்க வெங்கட்ராமைய்யா ஆகியோர்களுக்கு இடையே இருந்து வந்த ஒற்றுமை மற்றும் சுமூக உறவு அடிப்படையில் தாவா சொத்தை குடும்பத்தின் மூத்தவர் என்ற முறையிலும், அப்போது அவர்கள் இருவரும் கூட்டாக இருந்து வந்த காரணத்தினாலும். கிரய பத்திரத்தை பெத்த வெங்கட்ராமைய்யா பெயரில் பதிவு செய்து கொண்டு கூட்டு சுவாதீன அனுபவத்திலிருந்து வந்தனர் என்றும், எனவே தாவா சொத்து முழுமையாக பெத்த வெங்கட்ராமய்யாவிக்கு மட்டுமே சொந்தமான சொத்து கிடையாது என்றும், பிரதிவாதிகளின் தந்தையான சிக்க வெங்கட்ராமையாக்கும் தாவா சொத்தில் சரிசமமான பங்கு உள்ளது என்றும், பெத்த வெங்கட்ராமைய்யா பெயரில் கிரய பத்திரத்தின் அடிப்படையில் பெத்த வெங்கட்ராமைய்யா பெயரில் வருவாய்த்துறையினர் பட்டா வழங்கியுள்ளனர் என்றும், பெத்த வெங்கட்ராமய்யா அவர் உயிரோடு இருந்த வரையிலும் அவருடைய தம்பியான சிக்க வெங்கட்ராமைய்யா ஆகியோர்களுக்கு இடையில் கூட்டாக வாங்கிய சொத்துக்களின் மீது எந்த ஒரு பிரச்சனையும் ஏற்படவில்லை என்றும், அவர்கள் இருவரும் சரிசமமாக சொத்தை அனுபவித்து வந்ததாகவும், வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் தந்தை அவரவர் குடும்பத்துடன் தனித்தனி வீட்டில் வாழ்ந்து வந்த காரணத்தை வைத்து தாவா சொத்தின் மீது சிக்க வெங்கட்ராமையாவுக்கு உரிமை இல்லை என்று தாவாவில் தெரிவித்து இருப்பது முற்றிலும் தவறானது என்றும், குடும்ப உறுப்பினர்கள் வளர்ந்த பின்னர் ஒரே வீட்டில் சேர்ந்து வாழ முடியாத காரணத்தினால் வாழ்வதற்கான இட வசதி இல்லாத காரணத்தினால் தனித்தனி வீட்டில் வாழ்ந்து வந்தார்கள் என்றும், அதை காரணம் காட்டி வாதிகள் தாவா சொத்தில் பிரதிவாதிகளுக்கு சம்பந்தம் கிடையாது என்றும் கூற முடியாது என்றும், வாதிகளின் தந்தையான பெத்த வெங்கட்ராமய்யா 25.12.1997 ம் ஆண்டில் ஒரு உயில் பத்திரத்தை அவருடைய தம்பியான சிக்க வெங்கட்ராமய்யா மற்றும் அவருடைய மனைவி ஆன கிருஷ்ணம்மா பெயருக்கு எழுதிக் கொடுத்துள்ளார் என்றும், அந்த உயில் பத்திரம் மூலம் அவர் தாவா சொத்தானது அவர் மற்றும் அவருடைய தம்பி சிக்க வெங்கட்ராமைய்யா சேர்த்து வாங்கியதால் நாம் ஏக குடும்பமாக இருந்த காலத்தில் என் பெயருக்கு கிரய

மூலமாகவும் சுயராஜ்ஜியமாகவும் பாத்தியப்பட்டிருந்தாலும், இதனடியில் கண்ட சொத்தை நம் இரு குடும்பத்தார்களும் பொதுவாகவும் கூட்டாகவும் இதுவரை அனுபவித்து வந்தோம் அதனை தொடர்ந்து என்கூட பிறந்த தம்பி மற்றும் தம்பி மனைவியான உங்களுக்கு சொத்துக்களை கிரயம் செய்து கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்துடனும், என் அவசர நிமித்தமாக எனக்கு சேர வேண்டிய தொகையினை நான் உங்களிடம் இருந்து பெற்றுக் கொண்டு விட்டேன் என தெளிவாக எழுதி பிரதிவாதிகளின் தந்தையான அவருடைய தம்பிக்கு தாவா சொத்து முழுவதையும் கொடுத்துவிட்டார் என்றும், பிரதிவாதிகளின் தந்தைக்கு தாவா சொத்துகளில் பாதி பங்கு அவர் கிரயம் வாங்கும்போதே சொந்தமாக இருந்த நிலையில் வாதிகளின் தந்தையான வெங்கட்ராமய்யா அவருடைய பாதி பங்கை அவருடைய தம்பிக்கு விளக்கி விற்று விட்டார் என்றும், ஆனால் கிரயம் செய்து கொள்வதற்கு போதிய பண வசதி இல்லாத காரணத்தினால் ஆவண எழுத்தரின் ஆலோசனைப்படி பெத்த வெங்கட்ராமையா அவருடைய தம்பி பெயரிலும் தம்பி மனைவி பெயரிலும், உயில் பத்திரம் எழுதி பத்திர செலவு தவிர்த்து தாவா சொத்தின் மீது பிரதிவாதியின் தந்தைக்கு உரிமை மூலத்தை ஏற்படுத்திக் கொடுத்து விட்டார் என்றும், எனவே வாதிகளுக்கும் தாவா சொத்திற்கு எந்த ஒரு சம்பந்தமும் கிடையாது என்றும், உயில் எழுதிய நாளிலேயே தாவா சொத்துக்கள் முழுவதுமாக பிரதிவாதிகளின் தந்தை மற்றும் 1வது பிரதிவாதியின் சுவாதின அனுபவத்திற்கு வந்துவிட்டது என்றும், பிரதிவாதிகள் தாவா சொத்தின் அனுபவத்தில் இருந்து வருவதாகவும், 1997 ம் ஆண்டு வரை வாதிகளின் தந்தை பெத்த வெங்கட்ராமைய்யா கட்டி வந்த வரி ரசீதுகள் என்றும், அந்த ரசீதுகள் அவருடைய தம்பியான சிக்க வெங்கட்ராமைய்யாவும் சேர்த்து கட்டி வந்த ரசீதுகளாக கருத வேண்டும் என்றும், தாவா சொத்திற்கு முழு உரிமையாளர் என்ற அடிப்படையில் 1 பிரதிவாதி 08.02. 2008 ம் தேதியில் அவருடைய பிள்ளைகளான 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு 1 ஏக்கர் நிலத்தை தானம் செய்துள்ளார் என்றும், மீதிஉள்ள 2 ஏக்கர் 40 சென்டை 25.11.2008 ம் தேதியில் 1வது பிரதிவாதி 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு தானம் செய்திருக்கிறார் என்றும், தாவா சொத்து முழுவதும் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும்,

வழக்கில் வாதிகள் தாக்கல் செய்திருக்கும் வரி ரசீதுகள் எல்லாம் தாவா சொத்திற்கு சம்பந்தப்பட்டது அல்ல என்றும், தாவா சர்வே எண்ணில் வீடு உள்ளதை வாதிகள் வழக்கில் காட்டவில்லை என்றும், வாதிகள் செலுத்தியுள்ள வரி ரசீதுகள் தாவா சொத்திற்கு சம்பந்தப்பட்டது அல்ல என்றும், பட்டா எண் 2098 பெத்த வெங்கட்ராமையா மற்றும் சிக்க வெங்கட்ராமையா பெயர்களில் கூட்டாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பதாகவும், வாதிகள் வழக்கில் கேட்டுள்ள 2 தான பத்திரங்களை ரத்து செய்வதற்கு உரிய முறையில் உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தப்படவில்லை என்றும், வாதிகளின் வழக்கிற்கு வழக்கு மூலம் கிடையாது என்பதால் வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்க தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது.

**4. மேற்கூறப்பட்ட வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் வழக்காவணங்களின் அடிப்படையில் கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன:**

| | |
|---|---|
| 1. | தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டுள்ளதா? |
| 2. | வாதிகள் கோரியவாறு வாதிகளுக்கு விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதா? |
| 3. | வாதிகள் கோரியவாறு ஆவணங்கள் செல்லாது என்ற விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா ? |
| 4. | வாதிகள் கோரியவாறு நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா? |
| 5. | வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரங்கள் என்ன ? |

5. இவ்வழக்கில் வாதிகள் தரப்பில் 1ம் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.த.சா.ஆ. 1 முதல் வா.த.சா.ஆ.12 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 3ம் வாதி வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு உள்ளார். ராமச்சந்திரன் என்பவர் வா.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். முனிராஜ் என்பவர் வா.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். பிரதிவாதிகள் தரப்பில் 2ம் பிரதிவாதி பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலம் பி.த.சா.ஆ. 1 முதல் பி.த.சா.ஆ.4 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. தேன்கனிக்கோட்டை தாசில்தார் அலுவலக பதிவுறு எழுத்தர் பி.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர்

மூலம் சாட்சி சான்றாவணவம் X1 முதல் X5 குறியீடு செய்யப்பட்டுள்ளது. லலிதம்மா என்பவர் பி.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலம் பி.த.சா.ஆ. 5 மற்றும் பி.த.சா.ஆ.6 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. வாதிகள் தரப்பில், தாவா சொத்து ஆரம்பத்தில் முத்துராயசாமி என்பவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டிருந்தது என்றும், தாவா சொத்து சர்வே எண் 293/ 2 பி–க்கு 3 ஏக்கர் 40 சென்டிற்கு முத்துராயசாமி பெயரில் உள்ள அசல் பட்டா பாஸ்புத்தகம் வாதிகள் தரப்பில் வா.த.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்றும், அதற்கு உண்டான பட்டா எண் 758 என்றும், அசல் பட்டா பாஸ் புத்தகம் 16.07.1974 ம் தேதியில் முத்துராயசாமிக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்றும், முத்துராயசாமி தாவா சொத்து 3 ஏக்கர் 40 சென்டினை வாதிகளின் தந்தையான ராமைய்யா மகன் வெங்கட்ராமய்யாவுக்கு 23.06.1977 ம் தேதியில் முத்துராயசாமியும் சாமியும் அவரது மனைவி சுசீலமாகவும் சேர்ந்து ரூ.5,100/– க்கு கிரயம் செய்து கொடுத்திருக்கிறார்கள் என்றும், அந்த கிரய பத்திரத்தின் அசல் வாதிகள் தரப்பில் வா.த.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்றும், வாதிகள் ராமைய்யாவின் மகனான வெங்கட்ராமய்யாவின் வாரிசுகள் என்றும், ராமையாவிற்கு 2 மகன்கள் என்றும், முதல் மகன் பெயர் வெங்கட்ராமைய்யா (எ) பெத்த வெங்கட்ராமய்யா என்றும், ராமைய்யாவின் 2 வது மகன் சிக்க வெங்கட்ராமைய்யா என்றும், வெங்கட்ராமைய்யா (எ) பெத்த வெங்கட்ராமய்யாவுக்கு 1 முதல் 4 வாதிகள் மகன்கள் என்றும், கிருஷ்ணமூர்த்தி என்ற ஒரு மகன் இறந்து விட்டார் என்றும், அவரின் வாரிசுகள் 5, 6 வாதிகள் என்றும், வெங்கட்ராமைய்யா (எ) பெத்த வெங்கட்ராமய்யாவுக்கு லட்சுமம்மா மற்றும் சரஸ்வதி ஆகிய 2 மகள்கள் என்றும், அவர்கள் இருவரும் இறந்து விட்டார்கள் என்றும், தாவா சொத்து வெங்கட்ராமைய்யா (எ) பெத்த வெங்கட்ராமய்யாவுக்கு பிறகு அவரது ஆண் வாரிசுகளான வாதிகளுக்கு பாத்தியப்பட்டு வாதிகளின் அனுபவத்திலும் சுவாதீனத்திலும் இருந்து வருகிறது என்றும், 2 முதல் 4 பிரதிவாதிகள் சின்ன வெங்கட்ராமய்யா மற்றும் 1 வது பிரதிவாதியின் வாரிசுகள் என்றும், தாவா சொத்து சர்வே எண் 893/2 பி– பெத்த வெங்கட்ராமைய்யாவின் அவருடைய தனிப்பட்ட

சொத்து என்றும், அவர் தனிப்பட்ட முறையில் கிரயம் வாங்கி இருக்கிறார் என்றும், அதனால் அவரது பெயரில் பட்டா எண் 758 வழங்கப்பட்டுள்ளது என்றும், அந்த அசல் பட்டா வா.த.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்றும், தாவா சொத்திற்கும் பிரதிவாதிகளுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றும், தாவா சொத்தை தவிர்த்து இதர சொத்துக்கள் ராமைய்யாவின் 2 மகன்கள் ஆன வெங்கட்ராமய்யா மற்றும் சின்ன வெங்கட்ராமய்யா பெயரில் கூட்டாக உள்ளது என்றும், அதற்குண்டான அசல் பட்டா வாதிகள் தரப்பில் வா.த.சா.ஆ.6 ஆக தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது என்றும், தாவா சொத்து வெங்கட்ராமைய்யா என்கின்ற பெத்த ராமைய்யாவின் தனிப்பட்ட சொத்து என்றும், அந்த சொத்தில் பிரதிவாதிகளுக்கு எந்தவித உரிமையும் இல்லாத நிலையில் தாவா சொத்து சர்வே எண் 893/2 பி–ல் உள்ள 3 ஏக்கர் 40 சென்டினை 1வது பிரதிவாதி எந்தவித உரிமையும் இல்லாமல் கடந்த 08.02.2008 ஆம் தேதியில் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு 1 ஏக்கர் தான செட்டில்மெண்ட் செய்து வைத்திருக்கிறார் என்றும், தாவா சர்வே எண் 893/2 பி ல் உள்ள மீதி விஸ்தீரனம் 2 ஏக்கர் 40 சென்டினை 1வது பிரதிவாதி மீண்டும் 25.11.2008 ம் தேதியில் மற்றொரு தான செட்டில்மெண்ட் செய்திருக்கிறார் என்றும், 1வது பிரதிவாதி 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு தான செட்டில்மெண்ட் செய்திருந்த விவரமானது வாதிகள் அவர்களுடைய குடும்ப சொத்துக்களை பாகப்பிரிவினை செய்து கொள்வதற்கு வில்லங்கம் எடுத்து பார்த்தபோது தான் மேற்படி ஆவணங்கள் பற்றி தெரியவந்தது என்றும், பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் எந்தவித உரிமையும் இல்லாததால் அந்த இரண்டு தான செட்டில்மெண்ட் பத்திரங்களும் ரத்து செய்யப்பட வேண்டும் என்றும், தாவா சொத்து வெங்கட்ராமய்யா (எ) பெத்த வெங்கட்ராமையா 1999 ம் ஆண்டில் இறக்கும் வரை அவர் அந்த சொத்திற்கு வரி செலுத்தி அனுபவித்து வந்தார் என்றும், அவர் இறந்த பிறகு வாதிகள் அந்த சொத்திற்கு வரி செலுத்தி அனுபவித்து வருகிறார்கள் என்றும், வெங்கட்ராமய்யா மற்றும் அவரது பெயரில் உள்ள வரி ரசீதுகள் வா.த.சா.ஆ.7 மற்றும் வா.த.சா.ஆ.8 ஆக தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்றும், வெங்கட்ராமய்யாவின் இறப்புச் சான்றிதழ் வா.த.சா.ஆ.9 ஆக தாக்கல்

செய்யப்பட்டிருக்கிறது என்றும், சர்வே எண் 893/2 பி ஆனது 893 /2 பி 1 மற்றும் 893 / 2 பி 2 என உட்பிரிவு செய்யப்பட்டு சர்வே எண் 893 /2 பி 1ற்கு 2 ஏக்கர் 40 சென்டிர்க்கு வெங்கட்ராமைய்யா பெயரில் பட்டா உள்ளது என்றும், சர்வே 893/2 பி2 வில் உள்ள 1 ஏக்கருக்கு பிரதிவாதிகள் பெயரில் உள்ள பட்டா உள்ளது என்றும், அந்த 2 பட்டாக்களை வா.த.சா.ஆ.10 ஆக தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது என்றும், தாவா சொத்திற்கான ஆன்லைன் வரைபடம் வா.த.சா.ஆ.11 ஆக தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்றும், பிரதிவாதிகள் தரப்பில் பெத்த வெங்கட்ராமய்யா அவருடைய சகோதரர் ஆன சின்ன வெங்கட்ராமை மற்றும் அவரது மனைவியான 1வது பிரதிவாதிக்கு 25.12.1997 ல் ஒரு உயில் எழுதி கொடுத்து இருப்பதாக அவர்கள் எதிர்வாதம் செய்து வருவதாகவும், அந்த உயில் பதிவு செய்யப்படாத உயில் என்றும், வெங்கட்ராமையா என்கின்ற பெத்த வெங்கட்ராமையாவிற்கு வாரிசுகள் உள்ள நிலையில் அவர் சின்ன வெங்கட்ராமைய்யா மற்றும் அவரது மனைவிக்கு உயில் எழுதி கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், அந்த உயில் பிரதிவாதிகளால் தயார் செய்யப்பட்டுள்ளது என்றும், அந்த உயிலில் உள்ள கையெழுத்து வெங்கட்ராமைய்யா (எ) பெத்த வெங்கட்ராமய்யா உடைய கையெழுத்து கிடையாது என்றும், அந்த உயில் சாட்சி கையெழுத்து செய்திருக்கிறதாக சொல்லப்படும் பாப்பிசெட்டி மற்றும் அவரது மனைவியான ராஜம்மா ஆகிய இருவரும் தெலுங்கில் கையெழுத்து செய்வார்கள் என்றும், ஆனால் அந்த உயில் கன்னடத்தில் கையெழுத்து செய்திருப்பதாக தெரிய வருகிறது என்றும், அதனால் அந்த உயிலில் பாப்பி செட்டி மற்றும் ராஜம்மா இருவரும் சாட்சி கையெழுத்து செய்திருக்க வாய்ப்பில்லை என்றும், ராஜாம்மா வெங்கட்ராமய்யாவின் சகோதரி என்றும், பாப்பி செட்டி மற்றும் ராஜம்மா இருவரும் அவர்களது வாரிசுகளுடன் சேர்ந்து 2004 ல் ஒரு சொத்துக்களை விற்பனை செய்திருக்கிறார்கள் என்றும், அதில் அவர்கள் இருவரும் கையெழுத்து செய்திருக்கிறார்கள் என்றும், அந்த கையெழுத்து தெலுங்கில் உள்ளது என்றும், அதை காட்டுவதற்கு வாதிகள் தரப்பில் வா.த.சா.ஆ.12 தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது என்றும், பிரதிவாதிகள் தரப்பில் சொல்லப்படும்

25.12.1997 தேதியிட்ட உயிலில் உள்ள சாட்சிகள் கையெழுத்து பாப்பி செட்டி மற்றும் ராஜம்மாவால் செய்யப்பட்டது கிடையாது என்றும், அவர்கள் இருவரும் தெலுங்கில் கையெழுத்து செய்வார்கள் என்றும், அதில் கன்னடத்தில் அது அந்த அதில் உள்ள அவர்களுடைய சாட்சி கையெழுத்து கன்னடத்தில் இருப்பதால் அவர்கள் இருவரும் அந்த ஆவணத்தில் சாட்சி கையெழுத்து செய்திருக்க வாய்ப்பே இல்லை என்றும், அந்த உயில் பிரதிவாதிகள் தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்று,ம் தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்பதால் தாவாபடி தீர்ப்பாக வேண்டும் என்று வாதிடப்பட்டு வாதிகள் தரப்பில் எழுத்து பூர்வமான வாதுரையும் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

7. இதற்கு பிரதிவாதிகள் தரப்பில், ராமையாவிற்கு 2 மகன்கள் என்றும், அவர்கள் பெத்த வெங்கட்ராமைய்யா மற்றும் சிக்கவெங்கட்ராமையா என்பது ஒத்துக்கொள்ளப்படுகிறது என்றும், தாவா சொத்து வாதிகளின் தகப்பனாரான வெங்கட்ராமைய்யா (எ) பெத்த வெங்கட்ராமய்யாவுக்கு மட்டும் முழுவதுமாக பாத்தியப்பட்ட சொத்து கிடையாது என்றும், தாவா சொத்து சர்வே எண் 893/2 பி ஐ ராமையாவின் 2 மகன்கள் ஆன பெத்த வெங்கட்ராமைய்யா மற்றும் சிக்க வெங்கட்ராமைய்யா இருவரும் சேர்ந்து கிரயம் வாங்கிய சொத்துக்கள் என்றும், ஆனால், கிரய பத்திரம் குடும்பத்தின் மூத்த உறுப்பினர் என்ற முறையில் வெங்கட்ராமைய்யா பெயரில் மட்டும் பதிவு செய்யப்பட்டது என்றும், பெத்த வெங்கட்ராமய்யா பெயரில் கிரய பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளதால் அவரது பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும், பெத்த வெங்கட்ராமய்யா பெயரில் சொத்து பதிவு செய்திருந்தாலும் பெத்த வெங்கட்ராமைய்யா மற்றும் சிக்க வெங்கட்ராமைய்யா இருவரும் சேர்ந்துதான் அந்த சொத்தை அனுபவித்து வந்தனர் என்றும், தாவா சொத்தில் சிக்க வெங்கட்ராமைய்யா அவருக்கு பாகம் இருப்பதால்தான் பெத்த வெங்கட்ராமையா 25.12.1997ம் தேதியில் தாவா சொத்தில் அவருக்கு உண்டான பங்கினை சிக்க வெங்கட்ராமையா மற்றும் 1வது பிரதிவாதியான அவரது மனைவிக்கும் சேர்த்து அவரது பங்கினை எழுதி கொடுத்து இருப்பதாகவும், பிரதிவாதிகள் வசம் அப்பொழுது கிரய பத்திரம் எழுதி பதிவு செய்து கொள்வதற்கு வசதி இல்லாத காரணத்தினால் பத்திர எழுத்தர் ஆலோசனைப்படி பெத்த வெங்கட்ராமய்யா சிக்க வெங்கட்ராமைய்யாவிற்கும் அவரது மனைவியாக 1வது பிரதிவாதிக்கும் 25.12.1997 –ம் தேதியில் ஒரு உயில்

சாசனம் எழுதிக் கொடுத்து உள்ளார் என்றும், அந்த உயிலில் பெத்த வெங்கட்ராமையாவின் சகோதரி ஆன ராஜம்மா மற்றும் அவரது கணவர் பாப்பி செட்டி இருவரும் கணவன் மனைவி என்றும், அவர்கள் இருவரும் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள் என்றும், பாப்பி செட்டி மற்றும் ராஜம்மா இருவரும் இறந்துவிட்டனர் என்றும், அவர்கள் இருவரது மகள் லலிதம்மா தான் அசல் வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.3 ஆக விசாரிக்கப்பட்டு இருக்கிறார் என்றும், பி.சா.3 சாட்சியத்தின் மூலம் ராஜம்மா மற்றும் பாப்பி செட்டியின் சாட்சி கையெழுத்துக்கள் பி.சா.3 சாட்சியத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டு இருக்கிறது என்றும், ராஜாம்மா பெத்த வெங்கட்ராமைய்யா மற்றும் சிக்க வெங்கட்ராமைய்யாவிற்கு இருவருக்குமே உடன் பிறந்த சகோதரி என்றும், அவரது மகள் தான் பி.சா.3 சாட்சியாக பிரதிவாதிகள் தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ளார் என்றும், பி.சா.3 அவரது சாட்சியத்தில் தனது தாயார் அந்த உயில் சாட்சி கையெழுத்து செய்திருப்பதாக சொல்லி இருப்பது தனக்கு தெரியும் என்றும், மேலும் அந்த உயிலில் உள்ளது தனது தாயாரின் கையெழுத்தும் தனது தந்தையின் கையெழுத்தும் தான் என்று சாட்சியம் அளித்து இருப்பதாகவும், அதனால் பிரதிவாதிகள் தரப்பில், 25.12.1997 தேதியிட்ட பி.த.சா.ஆ.1 உயில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது என்றும், அந்த உயில் எழுதிக் கொடுத்த பிறகு வெங்கட்ராமைய்யா (எ) பெத்த வெங்கட்ராமய்யா இறந்த பிறகு அந்த உயில் அமலுக்கு வந்துள்ளது என்றும், அந்த உயிலின்படி தாவா சொத்துக்கள் சிக்க வெங்கட்ராமைய்யா மற்றும் அவரது மனைவியான 1வது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டிருந்தது இருந்தது என்றும், சிக்க வெங்கட்ராமைய்யா இறந்த பிறகு 1வது பிரதிவாதி அவரது மகன்களான 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு 08.02.2008 ம் தேதியில் தாவா சர்வே எண் 893/2பி ல் 1 ஏக்கரும், மீண்டும் 25.11.2008ம் தேதியில் தாவா சர்வே எண் 893/2பில் மீதிஉள்ள 2 ஏக்கர் 40 செண்டினையும் 2 தானப்பத்திரங்கள் வாயிலாக எழுதி கொடுத்து அதனடிப்படையில் பிரதிவாதிகள் தாவா சொத்தின் அனுபவத்தில் இருந்துவருவதாகவும், வாதிகளுக்கு தாவா சொத்தில் எந்தவித உரிமையும் இல்லை என்றும், பி.த.சா.ஆ.1 உயில் படி தாவா சொத்துக்கள் சிக்க வெங்கட்ராமைய்யா மற்றும் அவரது மனைவியான 1வது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டிருப்பதால் வாதிகளுக்கு தாவா சொத்துக்களை பொறுத்து எந்த உரிமையும் இல்லை என்பதால் வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று வாதிடப்பட்டு, பிரதிவாதிகள்

தரப்பில் எழுத்து பூர்வமான வாதுரையும் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

8. **எழுவினாக்கள் 1 முதல் 4 : தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டுள்ளதா ? வாதிகள் கோரியவாறு வாதிகளுக்கு விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதா ? வாதிகள் கோரியவாறு ஆவணங்கள் செல்லாது என்ற விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா ? வாதிகள் கோரியவாறு நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா ?** என்று பார்கையில், தாவா சொத்து சர்வே எண் 893 / 2 பி ஆனது 3 ஏக்கர் 40 சென்ட் என்பது இருதரப்பிலும் ஒத்துக்கொள்ளப்பட்ட சங்கதி ஆகும். தாவா சொத்து சர்வே எண் 893 / 2 பி ஆரம்பத்தில் முத்துராயசாமிக்கு பட்டா பாஸ்புத்தகத்தின் படி பாத்தியப்பட்டது என்பதற்கு வாதிகள் தரப்பில் முத்துராயசாமி பெயரில் உள்ள 1974 ஆம் ஆண்டிற்கான அசல் பட்டா பாஸ்போத்தகம் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. ஆக, தாவா சொத்து ஆரம்பத்தில் முத்தராயசாமிக்கு பாத்தியப்பட்டிருப்பது தெரிய வருகிறது. அந்த முத்துராயசாமியிடம் இருந்து வெங்கட்ராமைய்யா (எ) பெத்த வெங்கட்ராமய்யா 23.06.1977 ல் தாவா சர்வே எண் 893/2 பி ல் உள்ள 3 ஏக்கர் 37 சென்டினை கிரயம் வாங்கி இருக்கிறார். அந்த கிரய பத்திரத்தின் அசல் வாதிகள் தரப்பில் வா.த.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. பிரதிவாதிகள் தரப்பில் அந்த கிரய ஆவணம் பெத்த வெங்கட்ராமய்யா பெயரில் இருந்தாலும் அதற்கு உண்டான கிரய தொகை சிக்க வெங்கட்ராமய்யாவாலும் சேர்த்து கொடுக்கப்பட்டது என்றும், குடும்பத்தின் மூத்த உறுப்பினர் என்ற அடிப்படையில் வெங்கட்ராமைய்யா (எ) பெத்த வெங்கட்ராமய்யா பெயரில் பத்திரம் பதிவு செய்யப்பட்டதாக கூறப்பட்டிருக்கிறது.அதன்பிறகு வெங்கட்ராமைய்யா (எ) பெத்த வெங்கட்ராமய்யா இறப்பதற்கு முன்பு பெத்த வெங்கட்ராமைய்யா மற்றும் சிக்க வெங்கட்ராமைய்யா இருவரும் சேர்ந்து வா.த.சா.ஆ.2 தாவா சொத்தை கிரயம் வாங்கி இருப்பதால் வெங்கட்ராமைய்யா (எ) பெத்த வெங்கட்ராமய்யாவிற்கு உண்டான பாகத்தினை அவர் சிக்க வெங்கட்ரா**மைய்யா** மற்றும் அவரது மனைவியான 1வது பிரதிவாதிக்கு 25.12.1997 தேதியில் கொடுத்து விட்டதாகவும், அப்போது சிக்க வெங்கட்ராமைய்யா மற்றும் அவர் மனைவியிடம் கிரய பத்திரம் எழுதி பதிவு செய்வதற்கு வசதி இல்லாததால்

பத்திர எழுத்தர் ஆலோசனைப்படி பெத்த வெங்கட்ராமையா 25.12.1927 தேதியில் சிக்க வெங்கட்ராமையாக்கும் அவரது மனைவியான 1வது பிரதிவாதிக்கும் 25.12.1997 ம் தேதியில் பி.த.சா.ஆ. 1 உயில் பத்திரம் எழுதிக் கொடுத்திருப்பதாக கூறப்பட்டு அந்த உயிலின்படி சிக்க வெங்கட்ராமய்யாவிற்கும் அவரது மனைவிக்கும் தாவா சொத்து பாத்தியப்பட்டது என்று பிரதிவாதிகள் தரப்பில் கூறப்பட்டிருக்கிறது. தாவா சொத்து பெத்த வெங்கட்ராமைய்யாவிற்கு பாத்தியப்பட்டதா ? அல்லது 25.12.1997 தேதியிட்ட உயில்படி சிக்க வெங்கட்ராமய்யா மற்றும் 1வது பிரதிவாதிக்கு வெங்கட்ராமைய்யா (எ) பெத்த வெங்கட்ராமய்யா உயில் எழுதிய கொடுத்திருக்கிறாரா என்று பார்க்கையில், 25.12.1997 தேதியிட்ட பி.த.சா.ஆ.1 உயில் பிரதிவாதிகள் தரப்பில் நிரூபிக்கப்பட்டிருக்கிறதா என்று பார்க்கையில், பி.த.சா.ஆ.1 க்கான முத்திரைத்தாள் பெத்த வெங்கட்ராமய்யா பெயரில் வாங்கப்பட்டிருக்கிறது. அந்த முத்திரைதாள் வாங்கப்பட்ட தேதி 24.12.1997 ஆகும். பி.த.சா.ஆ.1 உயிலில் உள்ள கையெழுத்து பெத்த வெங்கட்ராமய்யா உடைய கையெழுத்து கிடையாது என்றும், அதில் சாட்சிகள் செய்துள்ளதாக சொல்லப்படும் ராஜம்மா மற்றும் பாப்பி செட்டி ஆகிய இருவரும் தெலுங்கில் தான் கையெழுத்து செய்வார்கள் என்றும், அதில் உள்ள அவர்களது சாட்சி கையெழுத்து கன்னடத்தில் உள்ளது என்றும், அதனால் பி.த.சா.ஆ.1 உயில் பிரதிவாதிகளால் மோசடியாக தயார் செய்யப்பட்டுள்ளதாக என்ற ஒரு வாதம் வாதிகள் தரப்பில் முன்வைக்கப்பட்டிருக்கிறது. பி.த.சா.ஆ.1 உயில் வெங்கட்ராமைய்யா (எ) பெத்த வெங்கட்ராமய்யாவால் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்று பிரதிவாதிகள் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பார்கையில், பி.த.சா.ஆ. 1 உயில் பதிவு செய்யப்படாத உயிலாகும். பி.த.சா.ஆ.1 ல் உள்ள பெத்த வெங்கட்ராமையாவின் கையெழுத்து பி.த.சா.ஆ.1 ல் உள்ளது கிடையாது என்று வாதிகள் தரப்பில் மறுத்து இருந்தாலும், பி.த.சா.ஆ. 1 ல் உள்ள பெத்த வெங்கட்ராமையாவின் கையெழுத்தோடு பி.த.சா.ஆ.1 ல் உள்ள பெத்த வெங்கடராமைய்யாவின் கையெழுத்து பொய் என நிரூபிக்க பெத்த வெங்கட்ராமய்யாவின் ஒத்துக்கொள்ளப்பட்ட கையெழுத்தை தாக்கல் செய்து ஒத்துக் கொள்ளப்பட்ட

கையெழுத்து மற்றும் பி.த.சா.ஆ.1 ல் உள்ள பெத்த வெங்கட்ராமைய்யா கையெழுத்து இரண்டும் வெவ்வேறு என்று நிரூபிக்க வாதிகள் தரப்பில் பி.த.சா.ஆ. 1ல் உள்ளது பெத்த வெங்கட்ராமனின் கையெழுத்து அல்ல என நிரூபிக்க கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி அதை நிரூபிக்க நடவடிக்கை எதுவும் வாதிகள் தரப்பில் எடுக்கப்படவில்லை. வாதிகள் தரப்பில் பி.த.சா.ஆ.1 ல் உள்ள சாட்சிகள் ராஜம்மா மற்றும் பாப்பி செட்டி இருவரும் தெலுங்கில் கையெழுத்து செய்வார்கள் என்றும், அவர்கள் கன்னடத்தில் கையெழுத்து செய்வது கிடையாது என்றும், 2004 ஆம் ஆண்டில் பாப்பி செட்டி மற்றும் ராஜம்மா அவரது குடும்பத்தினருடன் சேர்ந்து ஒரு சொத்தினை விற்பனை செய்திருப்பதாகவும், அந்த கிரய பத்திரத்தில் அவர்கள் இருவரும் கையெழுத்து செய்திருப்பதாகவும், அந்த கிரய பத்திரத்தில் பாப்பி செட்டி மற்றும் ராஜம்மா இருவரும் தெலுங்கில் கையெழுத்து செய்திருப்பதாக கூறி அந்த கிரய பத்திரத்தின் ஜெராக்ஸ் சான்றிட்ட நகல் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது. குறிப்பாக பி.த.சா.ஆ.1 ல் சாட்சி கையெழுத்து செய்துள்ள ராஜம்மா என்பவர் சிக்க வெங்கட்ராமய்யா மற்றும் பெத்த வெங்கட்ராமய்யாவின் உடன் பிறந்த சகோதரி ஆவார். ராஜம்மா பெத்த வெங்கட்ராமைய்யா மற்றும் சிக்க வெங்கட்ராமய்யாவின் சகோதரி அல்ல என வாதிகள் தரப்பில் மறுக்கப்படவில்லை. ராஜம்மாவின் கணவர் தான் பாப்பி செட்டி ஆவார். ராஜம்மா மற்றும் பாப்பி சிட்டி இருவரும் தான் பி.த.சா.ஆ. 1ல் சாட்சி கையெழுத்து செய்துள்ள நபர்கள். அவர்கள் இருவரும் இறந்து விட்டார்கள் என்பதற்கு ராஜம்மா மட்டும் பாப்பி செட்டியின் மகளான பி.சா.3 லலிதம்மா என்பவர் விசாரிக்கப்பட்டு இருக்கிறார். அவர் தனது சாட்சியத்தில் ராஜம்மா, பாப்பி செட்டி இருவரும் இறந்து விட்டனர் என்றும், ராஜம்மா இந்த மாதம் 4ம் தேதி இறந்துவிட்டார். என் தகப்பனாரும் 2021ம் ஆண்டில் இறந்துவிட்டதாக சாட்சியம் அளித்து இருக்கிறார். பொதுவாக உயில் சாசனமானது இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 68 இன் படி உயில் சான்றாவணத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ள நபர்களில் குறைந்தது 1 சாட்சி மூலம் விசாரித்து நிரூபிக்கப்பட வேண்டும் என்றும், அவ்வாறு பிரிவு 68 ன் படி உயில் சாட்சிகள் உயிருடன் இல்லாத நிலையில் அந்த சாட்சிகளை காண

இயலாத நிலையில் அந்த உயிலில் சாட்சி கையொப்பம் செய்துள்ள நபர்களில் குறைந்தது ஒரு சாட்சியின் கையெழுத்தாவது அந்த சாட்சி கையெழுத்தை தெரிந்த நபரின் மூலம் நிரூபிக்க வேண்டும் என்று பிரிவு 69ல் கூறப்பட்டிருக்கிறது. பி.த.சா.ஆ.1 ல் சாட்சி கையெழுத்து செய்துள்ள ராஜம்மா மற்றும் பாபி செட்டை இருவரும் இறந்துவிட்டனர். ஆக அவர்கள் மூலமாக உயிலில் சாட்சி கையெழுத்தை நிரூபிக்க இயலாது. அதனால் இந்தியா இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 69ன் படி ராஜம்மா மற்றும் பாப்பி செட்டி ஆகியோர்களின் கையெழுத்துகளை நன்கு தெரிந்த நபர்கள் மூலம் பிரதிவாதிகள் நிரூபிக்க வேண்டும். அவ்வாறு பார்க்கையில், ராஜம்மா மற்றும் பாப்பி செட்டியின் கையெழுத்துக்களை நன்கு அறிந்த நபர்கள் யார் என்றால் ராஜம்மா மற்றும் பாப்பி செட்டியின் வாரிசுகள் ஆவார்கள். அவ்வாறு பார்க்கையில், பி.சா.3 ராஜம்மா மற்றும் பாப்பி செட்டியின் வாரிசு என்ற முறையிலும் அவர்கள் இருவரது கையெழுத்தும் தனக்கு தெரிந்த முறைகளும் அவர் விசாரிக்கப்பட்டு இருக்கிறார். பி.சா.3 லலிதம்மா அவரது சாட்சியத்தில் தனது தாயார் மற்றும் தந்தைக்கு கன்னடம் மட்டும் தெரியும் என்றும், கன்னட மொழியில் தான் இருவரும் கையெழுத்து செய்வார்கள் என்று சாட்சியம் அளித்து இருக்கிறார். மேலும், தனது சாட்சியத்தில் பி.சா.3 ம் பி.த.சா.ஆ. 5 மற்றும் பி.த.சா.ஆ. 6 ஆனது ராஜம்மா மற்றும் பாப்பி செட்டியின் சாட்சி கையெழுத்துக்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். அந்த இரு கையெழுத்துகளும் தெலுங்கில் போடப்பட்டுள்ளதாக பி.சா.3 டம் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டதற்கு பி.சா.3 தனது தாய் மற்றும் தந்தை கன்னட மொழியில் மட்டுமே கையெழுத்து செய்வதாக சாட்சியம் அளித்து இருக்கிறார். வாதிகள் தரப்பில் ராஜம்மா மற்றும் பாப்பி செட்டி இருவரும் தெலுங்கில் கையெழுத்து செய்வதாகவும், அவர்கள் கன்னடத்தில் கையெழுத்து செய்யவில்லை என்றும், அதற்காக வா.த.சா.ஆ. 12 தாக்கல் செய்திருப்பதாக கூறப்பட்டிருக்கிறது. வா.த.சா.ஆ.12 ஐ பி.த.சா.ஆ.1ல் உள்ள ராஜம்மா மற்றும் பாப்பி செட்டியின் சாட்சி கையெழுத்துகளோடு இந்நீதிமன்றம் ஒப்பீடு செய்து பார்க்கையில், பி.த.சா.ஆ.5 ராஜம்மா கையெழுத்து என்றும் பி.த.சா.ஆ.6 ஆனது

பாப்பி செட்டியின் கையெழுத்து என்றும், பி.சா.3 ஆல் கூறப்பட்டுள்ள நிலையில் வா.த.சா.ஆ.12 ல் உள்ள ராஜம்மா மற்றும் பாப்பி செட்டியின் கையெழுத்துக்களோடு அவை இரண்டும் பி.த.சா.ஆ.1 உடன் ஒத்துப்போவதாக தெரிய வருகிறது. மேலும் வா.த.சா.ஆ.12 ல் உள்ள பாப்பி செட்டி மற்றும் ராஜம்மாவின் கையெழுத்து தெலுங்கில் செய்யப்பட்டிருக்கிறது என்று நிரூபிக்க வேண்டிய பொறுப்பு வாதிகளுக்கு இருக்கிறது. ஏனென்றால் வாதிகள் தான் ராஜம்மா மற்றும் பாபி செட்டி இருவரும் தெலுங்கில் கையெழுத்து செய்வார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. வா.த.சா.ஆ. 12 ல் உள்ள ராஜம்மா மற்றும் பாப்பிசெட்டியின் கையெழுத்து தெலுங்கில் உள்ளது என்று நிரூபிக்கவேண்டிய பொறுப்பு வாதிகளுக்கு உள்ளது. அவ்வாறு அது தெலுங்கில் உள்ளது என்பதற்கு தெலுங்கு தெரிந்த நபர்களையோ அல்லது அந்த ஆவணத்தில் உள்ள இதர நபர்களையோ அல்லது பதிவுதுறை அதிகாரிகளையோ விசாரித்து வாதிகள் எதுவும் நிரூபிக்கவில்லை. அதே சமயம் வா.த.சா.ஆ. 12 ல் உள்ள ராஜம்மா மற்றும் பாப்பிசெட்டியின் கையெழுத்துக்களோடு பி.த.சா.ஆ. 1 ல் உள்ள ராஜம்மா மற்றும் பாப்பிசெட்டியின் கையெழுத்தோடு அந்த எழுத்துக்கள் ஒத்து போவதாக தெரிய வருகிறது. ராஜம்மா மற்றும் பாப்பி செட்டியின் கையெழுத்தை நன்கு தெரிந்த அவரது மகளான பி.சா.3 அவரது சாட்சியத்தில் தனது தாயார் அந்த உயில் சாட்சி கையெழுத்து செய்திருப்பதாக தன்னிடம் தெரிவித்ததாக கூறியிருக்கிறார். மேலும் ராஜம்மா மற்றும் பாப்பி செட்டி இருவரும் பெத்த வெங்கடராமைய்யா மற்றும் சிக்க வெங்கடராமைய்யாவிற்கு உடன் பிறந்த சகோதரி ஆவார். வாதிகள் தரப்பில் வழக்குரையில் கூறியுள்ளபடி லட்சுமம்மா மற்றும் சரஸ்வதி ஆகிய இருவரையும் வழக்கில் சேர்க்கவில்லை. சரஸ்வதி இறந்து விட்டதாக கூறினாலும் அவரது வாரிசுகளாக லோகேஷ், சீனிவாஸ் மற்றம் ரவி ஆகிய உள்ளதாக கூறியுள்ள நிலையில் பெத்த வெங்கட்ராமையாவுக்கு பெத்த வெங்கட்ராமய்யாவின் மகள்களும் வாரிசாக வரும் நிலையில் பெத்த வெங்கட்ராமய்யாவின் மகள்களையோ அல்லது இறந்து போன மகள்களின் வாரிசுகளையும் வாதிகள் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. பி.த.சா.ஆ. 1 உயிலானது பெத்தவெங்கட்ராமைய்யாவால் சிக்க வெங்கட்ராமைய்யா மற்றம்

1வது பிரதிவாதிக்கு எழுதிகொடுத்திருப்பதாக பி.சா. 3 வாய்மொழி சாட்சியத்தின் மூலம் பிரதிவாதிகள் நிரூபித்து இருப்பதாக இந்நீதிமன்ற முடிவுக்கு வருகிறது. மேலும் வாதிகள் தரப்பில் பெத்த வெங்கட்ராமய்யா கிரயம் வாங்கிய கிரய ஆவணத்தின் அசல் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது என்றும், பிரதிவாதிகள் தரப்பில் அந்த ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை என்ற ஒரு வாதம் முன்வைக்கப்பட்டிருந்தாலும், பெத்த வெங்கட்ராமய்யா கிரயம் வாங்கிய அசல் கிரய ஆவணம் வாதிகள் வசம் இருப்பதாலயே பெத்த வெங்கட்ராமய்யா பி.த.சா.ஆ.1 உயிலை எழுதிக் கொடுக்கவில்லை என்ற முடிவுக்கு வர இயலாது. பி.த.சா.ஆ.1 உயிலானது இந்தியன் வாரிசு உரிமைச் சட்டம் 1925 பிரிவு 63 ன் படி உயில் ஆவணமானது கட்டாயம் சாட்சிகள் மூலம் நிரூபிக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ள நிலையிலும், இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 68 மற்றும் 69 ன் படி பிரதிவாதிகள் தரப்பில் பி.த.சா.ஆ. 1 உயில் அந்த உயிலில் சாட்சி கையெழுத்து செய்துள்ள ராஜம்மா மற்றும் பாப்பி செட்டியின் கையெழுத்துக்களை நன்கு அறிந்தவர்கள் மூலம் அவர்களது மகளான பி.சா.3 லலிதம்மா மூலம் ராஜம்மா மற்றும் பாப்பி செட்டியின் கையெழுத்தை பிரதிவாதிகள் நிரூபித்து இருப்பதாக இந்நீதிமன்ற முடிவுக்கு வருகிறது. மேலும் பி.த.சா.ஆ.1 லேயே வெங்கட்ராமையா மற்றும் சிக்க வெங்கட்ராமைய்யா ஆகிய இருவரும் பொதுவாகவும் கூட்டாகவும் இன்று வரை அனுபவித்து வந்தோம் என்றும், தான் பெங்களூருக்கு குடி போக வேண்டி இருப்பதால் சொத்தை வேறு நபர்களுக்கு விற்பனை செய்ய இஷ்டம் இல்லாமல் என் உடன் பிறந்த தம்பி மற்றும் தம்பி மனைவியான உங்களுக்கே சொத்துக்களை கிரயம் செய்து கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் என் அவசர நிமித்தம் எனக்கு சேர வேண்டிய தொகையை நான் உங்களிடம் இருந்து பெற்றுக் கொண்டு விட்டேன். அதன் பின்னர் நீங்கள் கிரயம் பதிவு செய்து கொள்ள உங்களிடம் பணம் இல்லாமல் போனதாலும் என் மீது உங்களுக்குள்ள நம்பிக்கையினாலும் உங்கள் மீது எனக்குள் அன்பினால் பாசத்தினாலும் மேலும் சில நாட்கள் எனக்கு உடல்நிலை சரியில்லாமல் போனதால் என்னால் நடமாட முடியாமல் போனதாலும் நான் மேற்கண்ட உங்களுக்கு பிற்காலத்திற்கு வாழ்க்கைக்கு சொத்துக்களை

ஆதரவு செய்து உயில் சாசனம் எழுதி வைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் உயில் எழுதி வைத்திருப்பதாக கூறப்பட்டிருக்கிறது. வாதிகள் தரப்பில் பி.த.சா.ஆ. 1 உயில் மறுக்கப்பட்டு இருக்கும் பட்சத்தில் பி.த.சா.ஆ.1ல் உள்ளது வெங்கட்ராமைய்யா (எ) பெத்த வெங்கட்ராமய்யாவின் கையெழுத்து அல்ல என நிரூபிக்க வேண்டிய பொறுப்பு வாதிகளுக்கு உள்ள நிலையில் பி.த.சா.ஆ.1 உயில் வெங்கட்ராமைய்யா (எ) பெத்த வெங்கட்ராமய்யாவின் ஒத்துக்கொள்ளப்பட்ட கையெழுத்துக்களோடு அதை ஆய்வுக்கு அனுப்பி பி.த.சா.ஆ.1 ல் உள்ளது பெத்த வெங்கட்ராமய்யாவின் கையெழுத்து அல்ல என நிரூபிக்க வேண்டிய பொறுப்பு வாதிகளுக்கு உள்ள நிலையில் வாதிகள் அவ்வாறு செய்யவில்லை. அதே சமயம் பி.த.சா.ஆ.1 ன் படி பெத்த வெங்கட்ராமையா சிக்க வெங்கட்ராமைய்யா மற்றும் அவரது மனைவியாக 1வது பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்துள்ளார் என்பது பி.த.சா.ஆ.1 ல் சாட்சி கையெழுத்து செய்துள்ள ராஜம்மா மற்றும் பாப்பிசெட்டி இருவரும் இறந்துவிட்ட நிலையில் அந்த இருவரது சாட்சி கையெழுத்துக்களை நன்கு தெரிந்த அந்த இருவரது மகளான பி.சா.3 லலிதம்மா மூலம் ராஜம்மா மற்றும் பாப்பி செட்டியின் சாட்சி கையெழுத்துக்களை பி.சா.3 சாட்சியத்தின் மூலம் பிரதிவாதிகள் நிரூபித்து இருப்பதால் தாவா சொத்து பொறுத்து வாதிகளுக்கு எந்தவித உரிமையும் உரிமையும் மூலமும் இல்லை என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது. தாவா சொத்தை பொறுத்து வாதிகளுக்கு உரிமை மற்றும் உரிமை மூலம் இல்லாத நிலையில் தாவா சொத்தை பொறுத்து வாதிகளுக்கு விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்ற முடிவுக்கு வருகிறது. தாவா சொத்தை பொறுத்து வாதிகளுக்கு உரிமை மற்றும் உரிமை மூலம் இல்லாத நிலையில் 1வது பிரதிவாதி 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு ஏற்படுத்திய 08.02.2008 மற்றும் 25.11.2008 தேதியிட்ட கிரய ஆவணங்களை பொறுத்து ரத்து செய்ய வாதிகளுக்கு உரிமை இல்லை என்றால் அந்த பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்ற முடிவுக்கு வருகிறது. வாதிகளுக்கு தாவா சொத்தை பொறுத்து உரிமை மற்றும் உரிமை மூலம் இல்லாத நிலையில் வாதிகளுக்கு நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

12. **எழுவினா. 5: வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய வேறு பாரிகாரங்கள் என்ன ?** என்று பார்கையில், 1 முதல் 4 எழுவினாக்கள் வாதிகளுக்கு எதிராக தீர்மானிக்கப்பட்டிருப்பதால் வாதிகளுக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கது அல்ல என எழுவினா 5ற்கு விடையளிக்கப்படுகிறது.

முடிவாக வா**திகளின்** வழக்கு செலவுத்தொகை இல்லாமல் தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07–ம் நாள் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

Sub Judge

S VIJAY ALAGIRI

Digitally signed by S VIJAY ALAGIRI
Location: Denkanikottai
Date: 2026.04.07 15:50:26 +0530

**<u>வாதிகள் தரப்பு சாட்சிகள்:</u>**

| | |
|---|---|
| வா.சா.1 | வெங்கடாஜலபதி |
| வா.சா.2 | நாகராஜ் |
| வா.சா.3 | ராமச்சந்திரன் |
| வா.சா.4 | முனிராஜ் |

**<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| | |
|---|---|
| வா.த.சா..ஆ.1 | 16.07.1974 தேதியிட்ட பட்டா பாஸ்புத்தகம் அசல் |
| வா.த.சா..ஆ.2 | 03.06.1977 தேதியிட்ட கிரய பத்திரம் ்அசல் |
| வா.த.சா..ஆ.3 | UDR பட்டா எண் 758 அசல் |
| வா.த.சா..ஆ.4 | 08.02.2008 தேதியிட்ட தானப்பத்திரம் சான்றிட்ட நகல் |
| வா.த.சா..ஆ.5 | 25.11.2008 தேதியிட்ட தான பத்திரம் சான்றிட்ட நகல் |
| வா.த.சா..ஆ.6 | 30.04.1993 தேதியிட்ட நத்தம் பட்டா அசல் |
| வா.த.சா.ஆ.7 | கந்தாய ரசீதுகள் எண்ணிக்கை 15 அசல் |
| வா.த.சா..ஆ.8 | வீட்ட வரி ரசீதுகள் எண்ணிக்கை 5 அசல் |

| | |
|---|---|
| வா.த.சா..ஆ.9 | வெங்கட்ராமைய்யாவன் இறப்பி சான்றிதழ் அசல் |
| வா.த.சா..ஆ.10 | 18.01.2021 தேதியிட்ட கணினி சிட்டா பதிவிறக்க நகல் |
| வா.த.சா..ஆ.11 | 18.01.2020 தேதியிட்ட கணினி புலவரைபடம் பதிவிறக்க நகல் |
| வா.த.சா..ஆ.12 | 20.12.2004 தேதியிட்ட பாப்பிசெட்டி, ராஜம்மா மற்றும் அவருடைய வாரிசுகள் சேர்ந்து பத்மாவதி என்பவருக்கு எழுதி கொடுத்த கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்:</u>**

| | |
|---|---|
| பி.சா.1 | வெங்கடலெட்சுமி |
| பி.சா.2 | நாகார்ஜுனா பதிவுறு எழுத்தர் |
| பி.சா.3 | லலிதம்மா |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| | |
|---|---|
| பி.த.சா.ஆ. 1 | 25.12.1997 தேதியிட்ட உயில் பத்திரம் அசல் |
| பி.த.சா.ஆ. 2 | 28.01.2023 தேதியிட்ட கந்தாய ரசீது அசல் |
| பி.த.சா.ஆ. 3 | 16.02.2021 தேதியிட்ட கிஸ்து ரசீது |
| பி.த.சா.ஆ. 4 | 29.01.2024 தேதியிட்ட கிஸ்து ரசீது |
| பி.த.சா.ஆ. 5 | 25.12.1997 உயிலில் உள்ள 1 வது சாட்சி கையெழுத்து |
| பி.த.சா.ஆ. 6 | 25.12.1997 உயிலில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து |

**<u>சாட்சி சான்றாவணம்: (X )</u>**

| | |
|---|---|
| சா.சா.ஆ.1 | அனுமதி கடிதம் |
| சா.சா.ஆ.2 | பட்டா எண் 5640 கணினி சிட்டா |
| சா.சா.ஆ.3 | பட்டா எண் 5640 கணினி சிட்டாவிற்கான உத்தரவி |
| சா.சா.ஆ.4 | பட்டா எண் 6165 க்கான கணினி சிட்டா |
| சா.சா.ஆ.5 | பட்டா எண் 6165 க்கான கணினி சிட்டாக்கான உத்தரவு |

Sub Judge

S VIJAY ALAGIRI

Digitally signed by S VIJAY ALAGIRI
Location: Denkanikottai
Date: 2026.04.07 15:50:18 +0530